**மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்.**

முன்னிலை : செல்வி ஜி.எம்.வசந்தி, எம்.எல்.,

(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)

மாவட்ட நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு)

**2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15 ஆம் நாள் - திங்கள்கிழமை**

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆனி திங்கள் 01ம் நாள்

CNR NO.TNNG010005562026

**Tr.O.P.No.20/2026**

1. நாகப்பட்டினம் மாவட்டம், தாலுக்கா, வெளிப்பாளையம், சிவன் கீழ வீதியில் கதவிலக்க எண் 14ஏ புதிய கதவு எண் 22ல் வசித்துவரும் ராஜகோபால் மனைவியும், வெள்ளையன் மகளுமான 53 வயதுள்ள முத்துமாரியம்மாள்.
2. மேற்படி முகவரியில் வசித்துவரும் வெள்ளையன் மனைவி 70 வயதுள்ள வள்ளி (எ) வள்ளியம்மாள். ....மனுதாரர்கள்

//எதிர்//

1. நாகப்பட்டினம் மாவட்டம், தாலுக்கா, வெளிப்பாளையம், சிவன் கீழ வீதியில் கதவிலக்க எண் 20ஏல் வசித்துவரும் வீராச்சாமி குமாரர் 72 வயதுள்ள சந்தானகிருஷ்ணன்.
2. மேற்படி முகவரியில் வசித்துவரும் சந்தானகிருஷ்ணன் குமாரர் 47 வயதுள்ள ஜெயராஜ் ....எதிர்மனுதாரர்கள்

இம்மனு நாகப்பட்டினம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண் 105/2023ஐ நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண் 48/2024 உடன்

இணைத்து விசாரணை செய்திட ஏதுவாக நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்து உத்தரவிடக்கோரி பிரிவு 24 சிபிசி- ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கலான நாள் 16.04.2026

மனு கோப்பில் எடுக்கப்பட்ட நாள் 22.04.2026

மனுவிற்கான நீதிமன்றக்கட்டணம் ரூ. 50/- செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என்முன்பாக இன்று (15.06.2026) விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்தரப்பில் வழக்குரைஞர் திரு. வேதை. இராமச்சந்திரன் அவர்களும், எதிர்மனுதாரர்கள்தரப்பில் வழக்குரைஞர் திரு. டி. வைரவநாதன் அவர்களும் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் அடிப்படையில் இன்று நீதிமன்றம் ஆவணங்களை பரிசீலனை செய்து வழங்கும்....

**தீர்ப்பாணை கட்டளை**

1. இம்மனு அனுமதிக்கப்படுகிறது;
2. நாகப்பட்டினம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண் 105/2023ஐ நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண் 48/2024 உடன் இணைத்து விசாரணை செய்திட ஏதுவாக நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்து உத்தரவிடப்படுகிறது.
3. நாகப்பட்டினம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மேற்படி வழக்கு கோப்புகள் அனைத்தையும் இந்த உத்தரவு நகல் கிடைத்த 3 தினங்களுக்குள் நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்க உத்தரவிடப்படுகிறது.

4. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட செலவுத்தொகைகளை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். (இருதரப்பிலும் செலவுப்பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை).

என்னால் கையொப்பமிடப்பட்டு, நீதிமன்ற முத்திரையிடப்பட்டு இன்று இந்த 2026ம் ஆண்டு ஜுன் மாதம் 15ம் நாளில் வழங்கப்பட்டது.

G M VASANTHI

Digitally signed by G M VASANTHI
Date: 2026.07.01 11:36:28 +0530

மாவட்ட நீதிபதி

நாகப்பட்டினம்.